**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC.32 of 2020 |
| Prosecution Witness | : | PW3 |

27.10.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமச்சந்திரன் | Calling | : சலூன் கடை |
| Father Name | : ஆறுமுகம் | | : |
| Village | : கண்ணனூர் | Age | : 40 |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்ககப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது கண்ணனூரில் குடியிருந்து சலூன் கடை வைத்து நடத்தி வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். 12.11.2018 ம் தேதி மதியம் 01.50 மணிக்கு புத்தனாம்பட்டி – கரட்டாம்பட்டி ரோட்டில் விமல்ராஜுக்கு விபத்து நடந்ததாக கேள்விபட்டு சம்பவ இடத்திற்கு சென்றேன். அங்கு போலீசார் விசாரணை செய்து வரைபடம் வரைந்தார்கள். சாட்சியாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். நான் கையெழுத்து செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

விபத்து பற்றி பரமசிவம் என்பவர் போனில் தகவல் சொன்னார். விபத்து நடந்த அன்று மதியம் 12.30 மணிக்கு தகவல் சொன்னார். கண்ணனூரில் இருந்து விபத்து நடந்த இடத்திற்கு செல்ல கால் மணி நேரம் ஆகும். நேராக சம்பவ இடம் சென்றேன். விபத்து நடந்த சாலை கிழமேல் சாலை. மேற்படி சாலையில் விபத்து வடபுறம் நடந்தது. நான் சம்பவ இடம் சென்றபோது அங்கு சுமார் 10 பேர் இருந்தார்கள். கையெழுத்து நான் மட்டும் போட்டேன். நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றும், விபத்தில் இறந்துபோனவர் எனது உறவினர்

**என்பதால் அவருக்கு அனுசரணையாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்